1986 ஏப்ரல் 28]

திரு. ஏ. ஜே. தாஸ் : ஏற்கெனவே சிங்கப்பூரில் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதே, அது தொடர்ந்து நடைபெறுகிறதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : கோவாப்டெக்ஸ் சிங்கப்பூரில் ஒரு விற்பனை நிலையத்தை ஆரம்பித்தது, அதில் நஷ்டம் வந்ததால் அது நிறுத்தப்பட்டது. இன்றைக்கு இந்தியாவிலுள்ள புகழ் பெற்ற பல ஆலைகள் தங்களுடைய துணி களை தனியாக வெளிநாடுகளில் விற்பனை செய்கின்றன. அதுபோல கோவாப் டெக்சும் தானே அங்கே விற்பனை நிலையங்களைத் திறந்து நஷ்டம் அடை வதைக் காட்டிலும், வெளிநாடுகளில் இருக்கின்ற ஏஜெண்டுகளை, இதற்காக நியமித்து, அவர்கள் மூலமாக விற்பனை செய்யலாமா என்பது பற்றி அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

திரு. அ. ப. சிவராமன் : உயர்ந்த ரக துணிகளைத்தான் வெளிநாடுகளில் விரும்புகின்றார்கள் என்பது உண்மையா? எவ்வளவு மதிப்புள்ள துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன? வரவர அந்நியச் செலாவணி அதிகமாகிக் கொண்டு வருகிறதா, இல்லை குறைகிறதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : அதுபற்றி விவரம் இல்லை.

பாலர் பள்ளிகள்.

* 217. வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன—

(அ) 1-10-1985 அன்றுள்ளபடி, சமூக நலத் துறையின் கீழ் இயங்கி வரும் பாலர் பள்ளிகள் எத்தனை?

(இ) அவற்றில் பணியாற்றும் அமைப்பாளர்கள் அல்லது ஆசிரியைகள் எத்தனை பேர்?

(உ) பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் எவ்வளவு?

(எ) அதை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) 9,140 பள்ளிகள்.

(இ) 9,140. குழந்தைகள் நல அமைப்பாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

(உ) இவர்களுக்கு கௌரவ ஊதியமாக மாதம் ரூ. 195 அளிக்கப்பட்டு வருகிறது.

(எ) இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 9,140 பள்ளிகள் இயங்குகின்றன என்றும் 9,140 அமைப்பாளர்கள் அல்லது ஆசிரியர்கள் அங்கே இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே ஒரு முறை நான் இந்த அவையில் பேசும்போது பாலர் பள்ளிகளில் ஆசிரியர்களாக இருக்கின்றவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளித்து, அவர்களையும் முறையாக ஆசிரியர்களாக ஆக்கி, ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்பதை ஏற்று, அமைச்சர் அவர்களும் அதைச் செய்வதாக அறிவித்திருந்தார்களே, அது குறித்து இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இது வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென்றால், இனிமேலாவது எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: கிராமப்புறங்களில் இருக்கின்ற அந்தக் குழந்தைகள் நல மையங்களில் இருப்பவர்கள் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் என்கிற பெயரில் தான் அங்கே பணிபுரிந்து வருகிறார்கள். குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கின்ற வகையிலே பயிற்சி அளிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தான், அவர்கள் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருப்பதால் அவர்களை ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இப்பொழுது நாட்டிலே நர்சரிப் பள்ளிகள் அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன. அங்கே அமைப்பாளர்களாக இருக்கிறவர்கள் நர்சரிப் பள்ளிகளுக்குச் செல்லக்கூடிய வயதிலே இருக்கின்ற குழந்தைகளைத் தான் பராமரித்து, பாடம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நர்சரிப் பள்ளிகளைக் கட்டுப்படுத்தும் வகையிலே, தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்தும் வகையிலே ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும், அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்றும் முன்பு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பாலர் பள்ளிகளை நர்சரிப் பள்ளிகளாக ஆக்கி, அந்த வகையில் அங்கே இருக்கின்ற அமைப்பாளர்களை எல்லாம் ஆசிரியர்களாக ஆக்கி, ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தை வழங்குகின்ற செயற் குறிப்பு இப்பொழுது பரிசீலனையில் இல்லையென்றாலும் கூட, வருங்காலத்திலாவது அதுகுறித்து பரிசீலிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 ஏப்ரல் 28]

(முற்பகல் 10-35)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் இருக்கிற இந்த பாலர் பள்ளிகளை எல்லாம் நர்சரிப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்று அரசு கொள்கை அளவில் முடிவெடுத்த பிறகு, அதைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. தனியார் நர்சரிப் பள்ளிகளை ஒழிக்கிற வகையில், கிராமப்புறங்களில் அரசு பள்ளிகளை ஆரம்பித்துச் செயல் படுகிற கருத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியார் ஆரம்பித்து செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நடுவிலே குறுக்கிடுவது அவர்களின் உரிமையைப் பறிப்பதுபோல ஆகும். அதற்கு யாருக்கும் உரிமை இல்லை. இருந்தாலும் இன்றைக்குக் கிராமப் புறங்களில் உள்ள குழந்தைகள் ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலும், நல்ல பழக்கவழக்கங்களை, சுகாதார முறைகளை ஆரம்பத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலும், கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகளுக் காக பாலர் பள்ளிகள் ஆரம்பித்து, அவர்களுக்கு 600 ரூபாய் மதிப்பீட்டில் கல்வி உபகரணங்களும், விளையாட்டுக் கருவிகளும் வழங்கி, அதை 3, 4 வயதுக் குழந்தைகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பேச முடியாதோர், காது கேளாதோர் பள்ளி.

*218 வினா.—திரு. எஸ். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:—

தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரத்தில் உள்ள பேச முடியாதோர் மற்றும் காது கேளாதோர் பள்ளியை, கடலூருக்கு மாற்றும் கருத்துரு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: ஆம்.

திரு. எஸ். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியைக் கடலூரில் அமைக்கும் கருத்துரு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எப்போது முதல் இது செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.